## 2022–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28– ஆம் தேதி (28.02.2022) திங்கள் கிழமை மாலை 04.30 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கைகள்

1. ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான ஆர்.கே.வி. ரோட்டில் உள்ள கடை எண். 89-ன் உரிமதாரர் திரு. என். தண்டபாணி என்பவர் தனது 03.02.2022-ந் தேதிய விண்ணப்பத்தில் மாமன்ற தேர்தலில் போட்டியிட உள்ளதால் தனது பெயரில் உள்ள கடையினை மாநகராட்சி வசம் ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார்.

நேதாஜி புதிய வணிக வளாக கடை எண். 35 மற்றும் 48-ன் உரிமதாரர் திரு. எம். பாலாஜி என்பவர் தனது 03.02.2022-ந் தேதிய விண்ணப்பத்தில் மாமன்ற தேர்தலில் போட்டியிட உள்ளதால் தனது பெயரில் உள்ள கடையினை மாநகராட்சி வசம் ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார்.

நேதாஜி புதிய வணிக வளாக கடை எண். 33, 34 மற்றும் 50-ன் உரிமதாரர் திரு. எம். பிரவீன் என்பவர் தனது 03.02.2022-ந் தேதிய விண்ணப்பத்தில் வியாபார சூழ்நிலை காரணமாக தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தாலும், வருகின்ற மாமன்ற உறுப்பினர் தேர்தலில் போட்டியிட உள்ளதாலும் தனது பெயரில் உள்ள கடையினை மாநகராட்சி வசம் ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார்.

காமராஜ் சாலை வணிக வளாக முதல் தளக் கடை எண். 7-ன் உரிமதாரர் திருமதி. எம். விஜயலட்சுமி என்பவர் தனது 03.02.2022-ந் தேதிய விண்ணப்பத்தில் வியாபார சூழ்நிலை காரணமாக தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தாலும், வருகின்ற மாமன்ற உறுப்பினர் தேர்தலில் போட்டியிட உள்ளதாலும் தனது பெயரில் உள்ள கடையினை மாநகராட்சி வசம் ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்படி குத்தகையினக் கடைகள் குத்தகைதாரர்களால் 04.02.2022-ல் மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி குத்தகைதாரர்கள் நாளதுதேதிவரை குத்தகைத் தொகை முழுவதையும் செலுத்தி விட்டதாலும், மாமன்ற உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுவதாக தெரிவித்துள்ளதாலும், மேற்படியாருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தை ரத்து செய்வதற்கும், பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொள்வதற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

அ) மேற்படி குத்தகையினக் கடைகளுக்கு குத்தகைதாரர்கள் நாளதுதேதிவரை குத்தகைத் தொகை முழுவதையும் செலுத்தி விட்டதாலும், மாமன்ற உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுவதாக தெரிவித்துள்ளதாலும், மேற்படியாருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தை ரத்து செய்வதற்கு அனுமதி வழங்கலாம்.

அ) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.

இ) ஏலம் குறைவாக கோரப்பட்டால் மேற்படி ஒப்பந்த காலத்திற்குண்டான வாடகை இழப்பினை அன்னாரின் வைப்புத் தொகையில் ஈடு செய்து கொள்ளலாம்.

கோப்பு எண். அ1/3640/2022

**470.** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

2. ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான ஆர்.கே.வி. சாலையில் உள்ள தரைத் தளக் கடை எண். 89, நேதாஜி புதிய வணிக வளாக கடை எண். 33, 34, 35, 48, 50 மற்றும் காமராஜ் சாலை வணிக வளாக முதல் தளக் கடை எண். 7 ஆகிய குத்தகையினக் கடைகளின் குத்தகைதாரர்கள் மாமன்ற உறுப்பினர் தேர்தலில் போட்டியிடும் காரணத்தால் மேற்படி குத்தகையினங்களை 04.02.2022 உடன் மாநகராட்சி வசம் ஒப்படைத்தனர். மேற்படி குத்தகையினக் கடை உரிமதாரர்களின் குத்தகை உரிமத்தை மாமன்ற தனி அலுவலரின் முன் அனுமதியின் பேரில் ரத்து செய்யப்பட்டு அதன் விவரம் 04.02.2022-ந் தேதிய இவ்வலுவலக உத்திரவு மூலமாக குத்தகைதாரர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

மேற்காணும் குத்தகையினங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதியும், பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.25,000-க்கும், பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொள்வதற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

அ) ஆர்.கே.வி. சாலையில் உள்ள தரைத் தளக் கடை எண். 89, நேதாஜி புதிய வணிக வளாக கடை எண். 35, 48, 33, 34, 50 மற்றும் காமராஜ் சாலை வணிக வளாக முதல் தளக் கடை எண். 7 ஆகிய குத்தகையினக் கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்படி பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.25,000-க்கும் அனுமதி வழங்கலாம்.

இ) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/3640/2020

**471.** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது